# 2022 ஆம் ஆண்டில் மாணவர்கள் இழந்த கற்றல் வாய்ப்புகளை முழுமைப்படுத்துவதற்கான சிறப்புப் பாடத்திட்டம்

## தரம் 07 குடியியற் கல்வி – முதலாம் தவணை


சமூக விஞ்ஞானத் திணைக்களம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை



www.nie.lk

# 2022 ஆம் ஆண்டில் இழந்த காலத்திற்கான மீட்புத் திட்டம் (Recovery Plan For Learning Loss 2022 )

## தரம் 07

( தரம் 07 முதலாம் தவணைக்கு பாடவேளைகள் 09உம் இரண்டாம் மூன்றாம் தவணைகளுக்கு 12 பாடவேளைகள் வீதம் மொத்தமாக 33 பாடவேளைகளுக்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது )

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | கற்றல் பேறுகள் | விடய உள்ளடக்கம் | ஆசிரியர் வழிகாட்டியில் உள்ள செயற்பாட்டு இலக்கம் | பாடநூலின் பாடத்தின் இலக்கமும் தலைப்பும் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| **தரம் 07 முதலாம் தவணையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட கற்றல் பேறுகளும் பாடமும்** | | | | | | |
| எமது குடும்பம்<br><br>7.1 கடமைகளையும் பொறுப்புக்களை யும் ஆற்றுவதனூடாக குடும்ப உறுப் பினர்களுக் கிடையே நல்ல ஆளிடைத் தொடர்புகளை உருவாக்கிக் கொள்வார் | சமூகத்தின் மிகச் சிறிய, மிக முக்கிய அலகு என்ற வகையில் குடும்பத்தை இணங்கண்டு ஒரு நல்ல உறுப்பினர் என்ற வகையில் நிலையான குடும்ப அலகுகளை உருவாக்கப் பங்களிப்புச் செய்வார் | • குடும்பம் எனும் எண்ணக்கருவை விளக்குவார்<br>• தமது குடும்பத்தை அறிமுகம் செய்வார்<br>• குடும்ப வகைகளுக்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குவார்.<br>• குடும்பமொன்றின் உறுப்பினர் என்றவகையில் தாம் அனுபவிக்கும் பயன்களை விவரிப்பார் | • குடும்பம்<br>• குடும்ப வகைகள்<br>• குடும்பத்தில் காணக்கூடிய பொது இயல்புகள்<br>• குடும்ப உறுப்பினர் என்ற வகையில் எமக்குக் கிடைக்கும் பயன்கள் | 7.1.1 | 01<br>எமது<br>குடும்பம்<br><br>பாடநூலில் இருந்து தேவையான பகுதியை தெரிவுசெய்க | 01 |
| | குடும்ப உறுப்பினர் என்ற வகையில் | • ‘சரியான வாழ்க்கைக் குறிக்கோள்’ என்பதை விளக்குவார். | • வெற்றிகரமான வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோள் | 7.1.2 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சரியான வாழ்க்கைக் குறிக்கோள்களை உருவாக்கி, அவற்றை நிறைவேற்றிக் கொள்ளச் செயற்படுவார் | | இருக்க வேண்டியதன் அவசியம் | | | |
| | குடும்பத்தின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி தன்மதிப்பை விருத்தி செய்து கொள்வார் | • தம்மைப்பற்றிய தனித்துவத்தையும் மதிப்பையும் ஏற்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவம்<br>• குடும்ப உறுப்பினர் என்ற வகையில் விருத்தி செய்து கொள்ள வேண்டிய நற்பண்புகள் | • தம்மைப்பற்றிய தனித்துவத்தையும் மதிப்பையும் ஏற்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவம்<br>• குடும்ப உறுப்பினர் என்ற வகையில் விருத்தி செய்து கொள்ள வேண்டிய நற்பண்புகள் | 7.1.3 | | |
| | குடும்ப உறுப்பினர்களின் வாழ்க்கையில் வெற்றிக்குச் சாதகமான சக்திகளை உரியவாறு பயன்படுத்தி பாதகமான சக்திகளில் இருந்து விடுபடச் செயற்படுவார் | • சாதகமான சக்திகளையும் பாதகமான சக்திகளையும் விபரிப்பார்<br>• சாதகமான சக்திகளின் பெறுபேறுகளை மதிப்பார்<br>• பாதகமான சக்திகளால் ஏற்படும் பாதகமான விளைவுகளை விவரிப்பார்<br>• பாதகமான சக்திகளிலிருந்து விடுபடுவதற்கான உத்திகளை விளக்குவார். | • சமூகத்தில் காணப்படும் சாதகமான, பாதகமான சக்திகளை இனங்காணல்<br>• சாதகமான சக்திகளை வாழ்க்கையுடன் சேர்த்துக் கொள்ளலும் பாதகமான சக்திகளிலிருந்து விலகிச்செல்ல ஆவணசெய்தலும் | 7.1.4 | | 01 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | குடும்ப உறுப்பினர்களின் ஆளுமை விருத்திக்காக விளையாட்டுக்களிலும் அழகியல் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார் | • விளையாட்டுக்கள் மற்றும் அழகியற் செயற்பாடுகள் மூலம் கிடைக்கும் பயன்களை விளக்குவார்<br>• குடும்ப அங்கத்தவர்களுடன் விளையாட்டுக்களிலும் அழகியற் செயற்பாடுகளிலும் ஈடுபடும் விதத்தை விவரிப்பார் | • அழகியற் செயற்பாடுகளின் பெறுமானம்<br>• நேரத்தை விளைதிறனுடையவாறு பயன்படுத்தல் | 7.1.5 | | 01 |
| | குடும்ப உறுப்பினர் என்ற வகையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சவால்களின் முன்னிலையில், பகுத்தறிவுடனும் ஆக்கபூர்வமான சிந்தனையுடனும் செயற்படுவார். | • குடும்ப உறுப்பினர் என்ற வகையில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் சவால்களையும் விபரிப்பார்<br>• சவால்களின் முன்னிலையில் புத்தி பூர்வமாகவும் ஆக்கபூர்வமாகவும் பகுத்தறிவுடனும் செயற்படும் விதத்தை விபரிப்பார்<br>• பல்வேறு மனவெழுச்சிகளை குறிப்பிடுவார் | • நாளாந்த வாழ்க்கையில் எந்தவொரு நபருக்கும் பல்வேறு சவால்களை எதிர்நோக்க நேரிடுதல்<br>• மனவெழுச்சிக் கட்டுப்பாட்டுடன் செயற்படுதலும் அதன் முக்கியத்துவமும்<br>• வாழ்க்கையின் முக்கிய சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்களின் போது மூலோபாயத்துடனும் படைப்பாற்றலுடனும், விமர்சன ரீதியாகவும் செயற்படுதல். | 7.1.6 | | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | • மாறிவரும் சந்தைச் சூழ்நிலைகளுக்கேற்ப விமர்சன ரீதியாகவும், அறிவுபூர்வமான நுகர்வோராகவும் செயற்படுவதன் முக்கியத்துவம் | | | |
| | குடும்பத்தின் நல்வாழ்வுக்காக வேலையுலகின் முக்கியத்துவம் மற்றும் குடும்ப வருமானம் பற்றிய அறிவூட்டத்தை வளர்த்துக் கொள்வார். | • நாளாந்தம், வாராந்தம், அல்லது மாதாந்தம் நல்ல வருமானம் கிடைத்தலின் மற்றும் குறைந்த வருமானம் கிடைத்தலின் விளைவுகளைக் கலந்துரையாடுவார் | • குடும்பமொன்றின் நிதி சார்ந்த பாதுகாப்பின் அவசியம் | 7.1.7 | | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | குடும்ப உறுப்பினர் என்ற வகையில் தமது உரிமைகளை அனுபவித்தவாறு, கடமைகளை நிறைவு செய்து, ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் வாழ்வதற்குத் தேவையான மானுடப் பண்புகளை வளர்த்துக் கொள்வார். | • குடும்பத்தினால் தமக்கும் தம்மால் குடும்பத்துக்கும் ஆற்றப்படவேண்டிய பொறுப்புக்கள் கடமைகளை குறிப்பிடுவார்<br>• உரிமைகளை அனுபவிக்கும் அதேவேளை அதனுடன் தொடர்புடைய பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் அவசியத்தையும் விளக்குவார்<br>• நற்பிரசையாவதற்குத் தேவையான பண்புகள் தமது குடும்பத்தின் ஊடாகக் கிடைக்கும் விதத்தை விபரிப்பார் | • குடும்ப உறுப்பினர்களின் உரிமைகள், கடமைகள், பொறுப்புக்கள்<br>• குடும்பத்தினால் உருவாக்கப்படும் நற்பிரசையிடம் காணப்படவேண்டிய குணவியல்புகள். | 7.1.8 | | 01 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | குடும்பத்துக்கும் அயலவர்க்கும் இடையே பரஸ்பரம் தொடர்புகளை உறுதிப்படுத்தி, சகவாழ்வுடன் வாழப் பழகிக்கொள்வார். | • குடும்பத்தின் உறுப்பினர்களையும் உறவு முறைகளையும் விவரிப்பார்<br>• உறவு முறைகளை குறிப்பதற்காக வெவ்வேறு பிரதேசங்களில் பயன்படுத்தப்படும் விளிப்புப் பதங்களை பயன்படுத்துவார்<br>• அயலவர்களுடன் நல்ல தொடர்புகளை கட்டியெழுப்பிக் கொள்ளலானது சமூகத்தின் இருப்புக்கு இன்றியமையாதது என்பதை விளக்குவார் | • குடும்ப உறுப்பினர்களும் உறவு முறைகளும்<br>• தமது நெருங்கிய உறவினர்களைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் விளிப்புப் பதங்கள்<br>• குடும்பத்தில் நடைமுறையிலுள்ள பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள், பெறுமானத் தொகுதிகள்<br>• குடும்பத்துக்கும் அயலவர்களுக்கும் இடையே காணப்படும் தொடர்புகளின் முக்கியத்துவம் | 7.1.9 | | 01 |
| மொத்தம் | | | | | | 09 |